21.09.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | | |
| த/பெ | வடிவேல் | | |
| கிராமம் | ஆரமேடு | தொழில் | |
| தாலுக்கா | திருக்கோவிலூர் | வயது | 60 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இன்று டி.எடைப்பாளையத்தை சேர்ந்த அப்துல் ஜபார் என்பவர் இறந்த வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் எடைப்பாயைம் கிராமத்தில் நசீர்பாஷா என்பவரது நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து வருகிறேன். ஆதலால் கடந்த 27.06.2018ந் தேதி மதியம் சமார் 1.30 மணியளவில் அந்த நிலத்திற்கு சென்று விட்டு திரும்பி வரும்போது அந்த ஊர் வீரன் கோயில் அருகில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அங்கு ஒரு மூன்று நபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த மூன்று நபர்களில் தற்போது நீதிமன்றத்தில் அவர்களில் இரண்டு நபர்கள் நீதிமன்றத்தில் தற்போது ஆஜரில் உள்ளார்கள். 1ம் எதிரி மோகனையும், 3ம் எதிரி செல்வத்தையும் சாட்சி அடையாளம் காட்டினார். இன்னொரு நபர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை என சாட்சி தெரிவித்தார். நான் இதுமட்டும் தான் பார்த்தேன். வேறு எதுவும் பார்க்கவில்லை. ஆனால் 6 மணியளவில் போலீஸ்காரர் என்று நாங்கள் அழைக்கும் அப்துல் ஜபாரை கொலை செய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தனர். நான் சம்பவம் குறித்து வேறு எதுவும் கேள்விப்படவில்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை காவல் துறையினர் வீட்டில் வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். நான் சொன்னதை காவல் துறையினர் எழுதிக்கொண்டனர். அந்த வாக்குமூலத்தை படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். அப்துல் ஜபார் இறந்த அன்று நான் அங்கு செல்லவில்லை. நான் என்னை காவல்துறை விசாரிக்கும் வரையில் வீரன் கோயிலுக்கு சென்றேன் என்றும், எதிரிகளை பார்த்தேன் என்றும் யாரிடமும் சொல்லவில்லை. என்னை காவல்துறையினர் விசாரிக்கும் போது நான் எடைப்பாளையம் நசீர் பாஷா நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்ததாக சொல்லவில்லை. எனக்கு சொந்தமாக எடைப்பாளையம் கிராமத்தில் நிலம் ஒன்றும் இல்லை. எங்கள் ஊர் மாரியம்மன் கோயிலில் நிர்வாகத்தில் நான் பொது மக்கள் பணம் ரூ.4,50,000./ மோசடி செய்தது சம்மந்தமாக மோகன் என்னை கேள்வி எழுப்பி அதனால் எங்களுக்குள் தகராறு இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் உள்ளது. மாரியம்மன் கோவில் பணம் ரு-4,50,000/- நான் எடுத்தது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றும், அதை மோகன் கேட்டு தகராறு செய்ததால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல் துறையினர் என்னை விசாரிப்பதற்கு முன்பு எழுத்து பூர்வமான அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கும் முன்பு எனக்கும், காவல் துறையினருக்கும் எந்த தொடர்பும் இல்லை. 27.06.2018ந் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் அந்த நிலத்திற்கு சென்று விட்டு திரும்பி வரும்போது எதிரிகள் பேசிக்கொண்டிருந்ததை பார்த்தாக நான் சொல்வது பொய் என்றும், மாரியம்மன் கோவில் பணத்தை நான் மோசடி செய்ததை மோகன் கேட்டதால் நான் விரோதத்தை வைத்து எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எடைப்பாளையம் கிராமத்தில் தலித் சமூக மக்கள் மற்றும் முஸ்லீம் சமூக மக்கள் ஆகியோர் ஒன்றாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். தலித் மக்கள் குடியிருப்பையும், முஸ்லீம் மக்கள் குடியிருப்பையும் சித்தலிங்கமடம் சாலை தான் பிரிக்கிறது என்றால் சரிதான். சித்தலிங்கமடம் சாலையை ஒட்டி நிறைய தலித் குடியிருப்புகள் உள்ளது என்றும், அங்கு தலித்

மக்கள் வசிக்கிறார்கள் என்றும், சொன்னால் சரிதான். அந்த சாலை வழியாக தான் வங்கிக்கு தொடக்க வேளாண்மை, கூட்டுறவுவங்கி, பள்ளிக்கூடம் ஆகியவற்றிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் காவல் துறை என்னை விசாரிக்கும் போது நசீர் பாஷா என்பவரின் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து ஓட்டி வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதையும் அவர்களிடம் கொடுக்கவில்லை. 2018ம் ஆண்டு நான் நெல் பயிர் செய்திருந்தேன். பொதுவாக நான் கடினமாக உழைக்ககூடியவன் காலை சென்றால் மீண்டும் மாலை தான் திரும்பி வருவேன் என்றால் சரிதான். 2018ம் ஆண்டு மாலை தான் வீட்டிற்கு வந்தேன் என்றால் ஆமாம். எனக்கு எடைப்பாளையத்தில் யார் யார் கார் வைத்துள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. நசீர் பாஷா என்பவர் எனது நண்பர் என்றால் சரிதான். எடைப்பாளையத்தில் தேர்தல் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் யாரிடமும் பேச மாட்டேன். நான் உண்டு என் வேலை உண்டு என்று இருப்பேன். நசீர் பாஷா பரிதா என்பவருடன் கணவன் மனைவியாக இருந்தார்கள் என்றால் அவர்கள் கணவன் மனைவி ஆகிவிட்டார்கள். நசீர் பாஷாவிற்கு இரண்டு மனைவி என்றால் அவர் திருமணம் செய்த முதல் மனைவி அவரிடம் வாழவில்லை. பரிதா அவரது இரண்டாவது மனைவி ஆவார். அன்று நான் பார்த்த கார் என்ன வகையான கார் என்று என்னால் கூற இயலாது. இந்த சம்பவம் நடந்தததற்கு பிறகு நான் நானாக காவல் துறைக்கு சென்று எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை. காவல் துறையினர் தான் என்னிடம் யாரோ சொன்னார்கள் என்று சொல்லி இது போன்ற வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டார்கள். நான் காலையில் போனால் திரும்ப வேலை முடித்து மாலை தான் வீட்டிற்கு வருவேன் என்றால் சரிதான். நான் காவல் துறையில் சொன்னது போல தற்போது நீதிமன்றத்தில் சொன்னது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை**

**இல்லை.**